## தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு – 2016

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று, மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் VII ஆவது பகுதியின் 40 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்படவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை, தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இற்கு இணங்காமைகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(i) நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக ரூபா 1,373,579 கிரயமான நிலையான சொத்துக்கள் முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தும் தொடந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிக்கூற்றுக்களை பரிசீலிப்பவர்களின் தகவல் தேவையினை நோக்காகக் கொண்டு செயற்படு நிலையிலிருந்து ஓய்வு பெறச் செய்யப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் இழிவுப் பெறுமதி கணக்குகளில் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், ரூபா 202,811 கிரயமான சொத்துக்கள் தொடர்பாக தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தினை அபிவிருத்தி செய்தல் அதிகாரச்சட்டத்தின் 5(ஆ) பிரிவு | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் அரசாங்க மற்றும் தனியார்துறை முயற்சிகளினால் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பயன்பாடுகள் தொடர்பாக முன்னைய ஆண்டில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப செயற்பாடுகளின் மீளாய்வு அறிக்கை அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டு மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான அந்த அறிக்கை அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 9/2009 மற்றும் 2017 ஏப்ரல் 19 ஆந் திகதிய 03/2017 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கைகள் | ஆணைக்குழுவில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச்செல்கைகளைப் பதிவதற்கான கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஆணைக்குழுவின் செயற்பட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 826,191 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 905,677 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 1,731,868 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் மொத்த மீண்டெழும் மானியம் மற்றும் மீண்டெழும் தன்மையுள்ள மூலதன மானியங்கள் முறையே ரூபா 3,761,808 இனாலும், ரூபா 6,164,100 இனாலும் அதிகரித்திருந்த போதிலும், உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைச் செலவினம் ரூபா 2,811,497 இனால் அதிகரித்தமை மற்றும் விஞ்ஞான தொழில்நுட்ப சேவைச் செலவினம் ரூபா 8,110,733 இனால் அதிகரித்தமை என்பன மேற்கூறப்பட்ட நிதிவிளைவின் வீழ்ச்சிக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த நான்கு வருடங்களினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் மிகையொன்று காணப்பட்டபோதும் 2012, 2014 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது. எனினும் ஊழியர் வேதனங்கள் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமானத் தேய்வு என்பன சீராக்கப்பட்டதன் பின்னர் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 12,119,005 தொகையான பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்து 2015 ஆம் ஆண்டின் இறுதியின் போது ரூபா 15,946,234 ஆக இருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 11,736,194 வரை குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தினை அபிவிருத்தி செய்தல் அதிகாரச்சட்டத்தின் 1 ஆவது பகுதியின் 5 ஆவது பிரிவின் பிரகாரம், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திக்கான கொள்கை மற்றும் திட்டமிடல் தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல், பொருளாதார அபிவிருத்தியை வலுப்படுத்தல், சுகாதார, போசணை மற்றும் வறுமையை நீக்குதல், கல்வி, பயிற்சியும் ஆராய்ச்சியும் தொடர்பாக தேவையான மனித மற்றும் ஏனைய வளங்களின் அபிவிருத்திக்கு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தை ஈடுபடுத்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் நிதியத்தை ஒதுக்குவதற்குரிய கொள்கை மற்றும் திட்டங்களைத் தயாரித்தல், இலங்கையில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களில் செயலாற்றலை மீளாய்வு செய்தல் மற்றும் அது தொடர்பான அறிக்கையொன்றை வருடாந்தம் அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்தல் இலங்கை விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மாநாட்டை இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை கூட்டுதல் மற்றும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பம் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு மண்டபமொன்றை வழங்குதல் மற்றும் அது தொடர்பாக அமைச்சருக்கு அறிக்கையொன்றை சமர்ப்பித்தல் என்பன ஆணைக்குழுவின் பணிகளாக இருந்தன.

மேற்கூறப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆண்டின் போது, 06 விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களில் மீளாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், ஆண்டின் போது 03 நிறுவனங்களில் மாத்திரம் மீளாய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் இறுதி மீளாய்வு அறிக்கை கணக்காய்வுத் திகதியான 2017 மார்ச் 17 ஆந் திகதி வரையிலும் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இளம் விஞ்ஞானிகளின் கருத்தரங்கின் (Young Scientists Fova Symposium) 05 ஆவது கட்டம் 2016 சனவரி 22 ஆந் திகதி நடாத்தப்பட்டிருந்ததுடன் அதன் போது வெளியிடப்பட்ட ஆராய்ச்சி அறிக்கைகளின் எண்ணிக்கை 35 ஆனமையால் அது முன்னைய ஆண்டின் போது நடாத்தப்பட்ட 04 ஆவது கட்டத்தின் 51 அறிக்கைகளுடன் ஒப்பிடும் போது 31 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(இ) அணிசேரா நாடுகளின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலையங்களுக்கு (The Centre for Science and Technology of non-aligned and others developing Countries) வருடாந்த பங்களிப்புக் கட்டணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 2,936,533 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அந்த நிலையத்தின் மூலம் 06 செயலமர்வுகள் நடாத்தப்பட்டிருந்த போதிலும், அதில் 03 செயலமர்வுகளுக்காக மாத்திரம் இலங்கையின் பிரதி நிதிகள் பங்குபற்றியிருந்தனர்.

## 4.2 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்

2006 இன் தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் வழிகாட்டிக்கு முரணாக மீளாய்வாண்டிற்காக ஒப்பந்தப் பெறுமதி முறையே ரூபா 454,800 மற்றும் ரூபா 1,089,480 தொகையான சுத்திகரிப்பு சேவை மற்றும் பாதுகாப்பு சேவைகளுக்காக எழுத்துமூல உடன்படிக்கையில் கைச்சாத்திடாமல் இரண்டு தனியார் நிறுவனங்களிலிருந்து உரிய சேவை பெறப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 133(1)(அ) பிரமாணத்தின் பிரகாரம் உள்ளகக் கணக்ககாய்வு நடவடிக்கைகளைச் செய்வதற்காக உள்ளகக் கணக்காய்வு பிரிவொனறை தாபிப்பதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு நடவடிக்கைகள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், நிதிப்பிரமாணம் 134(3) இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டு கணக்காய்வுப் பரீட்சிப்பிற்குரிய அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக பாதிடப்பட்ட செலவினத்தை உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பீடு செய்த போது 05 விடயங்களில் 50 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பாதீடு ஆக்க பூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| | **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|
| (அ) | பெறுகைகள் கட்டுப்பாடு | முறையான ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமல் சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டமை |
| (ஆ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | முறையான மதிப்பீடு தயாரிக்கப்படாமையினால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டமை |
| (இ) | பதவியணியினர் நிர்வாகம் | (i) மேவுகை செய்யப்படாத தாமதமாக வருகை தந்ததற்கான விடுமுறை கணிப்பீடு செய்யப்படாமை. |
| | | (ii) விஞ்ஞான சேவைகளிலுள்ள பதவியணியின் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை |